சிறுவர்களுக்கெனத் தனித்துவமான இலக்கியம் படைக்கப்படல் வேண்டுமென்னும் எண்ணம் தமிழ் மக்களுக்குப் புதியதொன்றுஅன்று. பண்டைத் தமிழ் இலக்கிய மரபில், இச்சிறுவர் பாடல்களுக்குத் தனியானதோர் இடமுண்டு

நடப்பியல் நுணுக்கமும் நம்பகத்தன்மையும் கவிஞர் குமாரசாமியின் பாடல்களில் உள்ள சிறப்பியல்புகளாகும்.

பாப்பாக்களின் அனுபவத்தோடு, மனித உறவாடலின் பாற்படும் அனுபவங்களையும் இணைத்துக் காட்டுகின்றார் கவிஞர்.

அஃறிணை விலங்குப் பெயர்கள் பலவும் உயர்திணை விகுதி பெற்றுவருகின்றன. இவ்வாறு வருவதால், அவையும் மனித உறவாடலுக்கு உரியனவாகக் குழந்தை மனங்களின் பொருட்டுப் பாவனை செய்யப்படுகின்றன. இவ்வித உறவாடல், இயற்கையோடு இசைந்த ஒன்றல் உணர்வுக்கு உதவுகின்றது என்பது கவனிக்கத்தக்கது.

கவிஞர். வே. குமாரசாமியவர்களின் பாடல்கள் குழந்தை தமிழ்ப் பாடல் இலக்கியத்துக்கு ஓர் உயரிய முன்னுதாராணமாகவும் சிறந்த பங்களிப்பாகவும் திகழ்கின்றது. ஆகையால் இது குழந்தை நலனில் அக்கறையுள்ள அனைவராலும் விரும்பி வரவேற்கத் தக்கது.

– முருகையன்.

வெளியீடு – தேசிய கலை இலக்கியப் பேரவை

சவுத் ஏசியன் புக்ஸ்

470400

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org